1982 மார்ச் 15]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

தமிழ்நாடு இரசாயன பொருள்கள் உற்பத்தி நிறுவனத்தால் பெறப்பட்ட கடன்.

*வினா எண் 511—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு இரசாயனப் பொருள்கள் உற்பத்தி கம்பெனி உரிமையாளர் தமிழ்நாடு தொழில் அபிவிருத்தி கார்ப்பரேஷன் TIDCO இடம் ரூ. 17.50 லட்சம் வாங்கி திருப்பிக் கொடுக்காமல் இருப்பது உண்மையா?

(ஆ) மேற்படி தொகையை வசூலிக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு இரசாயன பொருள்கள் உற்பத்தி நிறுவனத்தைச் சார்ந்த தனி நபர் எவருக்கும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் கடன் வழங்கவில்லை. நிறுவனத்தின் முனைவர் என்ற தகுதியில் நிதி நிறுவனங்கள் தேவைக்கு ஏற்பவும், மேலும் இந்திய தொழில் முன்னேற்ற வங்கியின் வரம்புக்கு உட்பட்டு ரூ. 17·50 இலட்சத்தை ''டிட்கோ'' பாதுகாக்கப் படாத கடனாக அளித்துள்ளது. இந்த கடனுக்கு வட்டி ஏதும் வசூலிக்கக்கூடாது. என்றும் இந்தியத் தொழில் முன்னேற்ற வங்கியின் உத்தரவு இல்லாமல் திருப்பி பெறக் கூடாது என்றும் மேற்படி வங்கி கூறியிருக்கிறது. ஆகையால் மேற்படி தொகையை வசூலிப்பது என்ற கேள்வி தற்போது எழவில்லை.

விவசாயக் கிணறுகள் வெட்ட ஆதி திராவிடர்களுக்கு அளிக்கப்படும் மானியம்.

மாண்பு[illegible] எண் 512—திரு. க. பாரமலை : மாண்புமிகு ஆதி தி[illegible]த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய கிணறுகள் வெட்டுவதற்கு அரிசனங்களுக்கு மானியமாக பணம் வழங்குவது நிலவள வங்கிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பின்பு கடந்த இரண்டு ஆண்டுகளாகவே அந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை அரசு அறியுமா?